# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 09.04.2026**

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள்.SA.17104/C/2023 & SA.17207/C/2023**

| | | |
|---|---|---|
| திரு ஆ. சந்தோஷ் | .. | மனுதாரர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர் /<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்,<br>முகையூர், விழுப்புரம் மாவட்டம் - 605 755. | .. | பொது அதிகார அமைப்பு |

*************

## இறுதி ஆணை

மேற்படி வழக்குகளானது 04.03.2026 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவில், *மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்காமல் மனுதாரருக்கு காலதாமதமாக தகவல்கள் வழங்கிய காரணத்தினால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி, மனுதாரருக்கு இழப்பீடாக (வரைவோலையாக) ரூ.**10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** வழங்க விழுப்புரம் மாவட்டம், முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பிற்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்பட்டு, அவ்விழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான இரசீதின் நகலினை **09.04.2026** அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு விழுப்புரம் மாவட்டம், முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், பொதுத் தகவல் அலுவலரான* திருமதி த. வீரம்மாள் என்பவர் ***09.04.2026*** *அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு* இழப்பீடாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வங்கி காசோலை (காசோலை எண்.980962 நாள் 08.04.2026 Indian Bank, Sennakunam) வழங்கப்பட்டது என்றும் அவற்றை மனுதாரரர் பெற்றுக்கொண்டார் எனவும் தெரிவித்து, அதற்கான இரசீதின் நகலினை பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து, இவ்வழக்கிலிருந்து *விழுப்புரம் மாவட்டம், முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் /* பொதுத்

தகவல் அலுவலர் விடுவிக்கப்படுகிறார் எனத் தெரிவித்து, இவ்வழக்குகள் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள்.SA.17104/C/2023 & SA.17207/C/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு :-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
முகையூர், விழுப்புரம் மாவட்டம் - 605 755.

**<u>வழக்கு எண்கள்.SA.17104/C/2023 & SA.17207/C/2023</u>**
**<u>மனுதாரர் :-</u>**
திரு ஆ. சந்தோஷ்,
எண்.1/289, பெருமாள் கோயில் தெரு,
சென்னகுணம் ஊராட்சி,
விழுப்புரம் மாவட்டம் - 605 755.

Copy to: File
SNPS / 17.04.2026